ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

न नाकाधीशीयप्रथितपदलाभे मम रतिः
न लोके वाञ्छास्ति त्रिभुवनविधातुश्च महिते ।
न वैकुण्ठे तादृग्विभवभरिते विष्णुनगरे
पुरारे त्वत्पादान्तिकवसतिमात्रे मम रतिः ॥ १८ ॥

ந நாகாதீஶீயப்ரதிதபதலாபே மம ரதி:
ந லோகே வாஞ்சாஸ்தி த்ரிபுவநவிதாதுஶ்ச மஹிதே ।
ந வைகுண்டே தாத்ருக்விபவபரிதே விஷ்ணுநகரே
புராரே த்வத்பாதாந்திகவஸதிமாத்ரே மம ரதி: ॥கஅ॥

ஹே புராரே! ஹே திருபுராக்கர்களை வென்ற பரமேச்வர ஸ்வர்க்கலோகத்திற்கு அதிபதியான இந்திரனுடைய மிகவும் பிரஸித்திபெற்ற, ஸ்வர்க்கம் என்கிற ஸ்தானத்தை அடையவேண்டுமென்கிற விருப்பம் எனக்கில்லை. மூவுலகங்களையும் சிருஷ்டிக்கும் சக்திவாய்ந்த பிர்மாவினுடைய பூஜ்யமான லோகத்தில் நாம் வஸிக்கவேண்டுமென்கிற தோற்றமும் எனக்கு ஏற்படவில்லை. பல ஜனங்களாலும் போற்றக்கூடிய மகிமைவாய்ந்த ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடையதான வைகுண்டமென்கிற சிறந்த லோகத்தில் வஸிக்கவேண்டுமென்கிற அவாவும் எனக்கில்லை. பின்னே, உமது பொற்பாத கமலங்களுடைய ஸமீபத்தில் எப்பொழுதும் வஸிக்கவேண்டுமென்பதில் தான் எனக்கு அதிக விருப்பமிருக்கின்றது. அவ்விதம் பூர்த்தியாகும்படி அனுக்கிரஹிக்கவேண்டும்.

ஒரு பக்தர் ஸ்ரீ பகவானிடம் ப்ரார்த்திப்பதாவது:—

ஹே சந்திரசேகரா ! நான் எனக்குத் தகாததான ஸ்வர்கத்தையோ, பிரம்மலோகத்தையோ, அல்லது வைகுண்டத்தையோ எனக்கு அளிக்கவேண்டுமென்று தங்களிடம் கேட்கவில்லை. உமது சரணாரவிந்தங்களுடைய அருகிலிருந்து அவைகளை ஸேவிக்கவேண்டுமென்கிற அவா அதிகமிருப்பதால் அதைப் பூர்த்தி செய்துகொடுத்து அனுக்ரஹிக்கவேண்டுமென்பதேயாகும்.

சுபம். உபபத்திராதிபர்.

## ஜயவிஜ.

(410-வது பக்கத்தொடர்ச்சி.)

चण्डालश्वपचानां तु बहिर्ग्रामात्प्रतिश्रयः ।
अपपात्राश्च कर्तव्या धनमेषां श्वगर्दभम् ॥
वासांसि मृतचेलानि भिन्नभाण्डेषु भोजनम् ।
कार्ष्णायसमलङ्कारः परिव्रज्या च नित्यशः ॥
न तैस्समयमन्विच्छेत्पुरुषो धर्ममाचरन् ।
व्यवहारो मिथस्तेषां विवाहस्सदृशैस्सह ॥
अन्नमेषां पराधीनं देयं स्याद्भिन्नभाजने ।
रात्रौ न विचरेयुस्ते ग्रामेषु नगरेषु च ॥
दिवा चरेयुः कार्यार्थं चिह्निता राजशासनैः ।
अबान्धवं शवं चैव निर्हरेयुरिति स्थितिः ॥
वध्यांश्च हन्युस्सततं यथाशास्त्रं नृपाज्ञया ।
वध्यवासांसि गृह्णीयुः शय्याश्चाभरणानि च ॥

म. 10-51-52-53-54-55-56.

சண்டாலஶ்வபசாநாம் து பஹிர்க்ராமாத்ப்ரதிஶ்ரய: ।
அபபாத்ராஶ்ச கர்தவ்யா தநமேஷாம் ஶ்வகர்தபம் ॥
வாஸாம்ஸி ம்ருதசேலாநி பிந்நபாண்டேஷு போஜநம் ।
கார்ஷ்ணாயஸமலங்கார: பரிவ்ரஜ்யா ச நித்யஶ: ॥
ந தைஸ்ஸமயமந்விச்சேத் புருஷோ தர்மமாசரந் ।
வ்யவஹாரோ மிதஸ்தேஷாம் விவாஹஸ்ஸத்ருஶைஸ்ஸஹ ॥
அந்நமேஷாம் பராதீநம் தேயம் ஸ்யாத்பிந்நபாஜநே ।
ராத்ரௌ ந விசரேயுஸ்தே க்ராமேஷு நகரேஷு ச ॥

𑌦𑌿𑌵𑌾 𑌚𑌰𑍇𑌯𑍁𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚𑌿𑌹𑍍𑌨𑌿𑌤𑌾 𑌰𑌾𑌜𑌶𑌾𑌸𑌨𑍈𑌃 ।
𑌅𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌂 𑌶𑌵𑌂 𑌚𑍈𑌵 𑌨𑌿𑌰𑍍𑌹𑌰𑍇𑌯𑍁𑌰𑌿𑌤𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ॥
𑌵𑌧𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌨𑍍𑌯𑍁𑌸𑍍𑌸𑌤𑌤𑌂 𑌯𑌥𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌨𑍃𑌪𑌾𑌜𑍍𑌞𑌯𑌾 ।
𑌵𑌧𑍍𑌯𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑌿 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑍁𑌃 𑌶𑌯𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌾𑌭𑌰𑌣𑌾𑌨𑌿 𑌚 ॥

சண்டாளன், சுவபசன் இவர்கள் கிராமத்திற்கு வெளியில் தான் குடியிருக்கவேண்டும். அவர்களிடம் லோஹபாத்திரங்கள் இருக்கக்கூடாது. அவர்களுடைய சொத்து நாயும், கழுதையுமேயாகும். பிரேதவஸ்திரங்கள் தான் அவர்களுக்கு வஸ்திரம். உடைந்த சட்டிகள் தான் அவர்களுக்குப் பாத்திரம். அவைகளில் தான் போஜனம் செய்யவேண்டும். இரும்பினுற் செய்யப்பட்ட ஆபரணங்களையே அவர்கள் தரித்துக்கொள்ளவேண்டும். எப்பொழுதும் அவர்களுக்குரிய வேலைகளையே செய்துகொண்டிருக்கவேண்டும். சாஸ்திரீயமான தர்மங்களையனுஷ்டிக்கும் எவனும் இவர்களுடன் அதிகசம்மந்தம் வைத்துக்கொள்ளக்கூடாது. அவர்களுடைய வியவகாரங்களும், விவாகம் முதலிய காரியங்களும் அவர்களுக்குச் சமானமானவர்களுடன் தான் இருக்கவேண்டும். அவர்களுக்கு உடைந்த பாத்திரத்தில் தான் பிறரால் அன்னம் கொடுக்கப்படவேண்டும். கிராமங்களிலும், நகரங்களிலும், இராத்திரி காலங்களில் சஞ்சாரம் செய்யக்கூடாது. அவசியமான காரியம் இருந்தால் பகலில் அரசன் உத்திரவின்பேரில் அடையாளம் செய்யப்பட்டவர்களாய்க்கொண்டு சஞ்சாரம் செய்யலாம். பந்துக்கள் இல்லாத சவத்தை அப்புறப்படுத்தவேண்டியது அவர்களுடைய காரியமாகும். இராஜா ஆக்ஞையால் விதியை அனுசரித்துக் கொலை செய்ய வேண்டியவர்களைக் கொலை செய்யவும் வேண்டும். அவ்விதம் கொலை செய்யப்பட்டவர்களுடைய வஸ்திரங்களையும், படுக்கைகளையும், ஆபரணங்களையும் இவர்களே எடுத்துக்கொள்ளலாம் என்றும், பின்னும்

दिवाकीर्तिमुदक्यां च पतितं सूतिकां तथा ।
शवं तत्स्पृष्टिनं चैव स्पृष्ट्वा स्नानेन शुध्यति ॥

𑌦𑌿𑌵𑌾𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑍁𑌦𑌕𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌪𑌤𑌿𑌤𑌂 𑌸𑍂𑌤𑌿𑌕𑌾𑌂 𑌤𑌥𑌾 ।
𑌶𑌵𑌂 𑌤𑌤𑍍𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌿𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌸𑍍𑌨𑌾𑌨𑍇𑌨 𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿 ॥

சண்டாளன், பஹிஷ்டாஸ்திரீ, பதிதன் பிரஸவித்தவள், பிரேதம் இவர்களைத் தொட்டவன் ஆகிய இவர்களைத் தொட்டால் ஸ்நானம் செய்து சுத்தியடைகிறுனென்று ஐந்தாவது அத்தியாயத்திலும் மனு நன்கு கூறியிருக்கிருர்.

கௌதமஸூத்திரம்:—

पतितचण्डालसूतिकोदक्या शवस्पृष्टितत्स्पृष्ट्युपस्पर्शने सचैलमुदकोपस्पर्शनाच्छुद्धिः ॥ பதிதசண்டாலஸூதிகோதக்யா ஶவஸ்ப்ருஷ்டி தத்ஸ்ப்ருஷ்ட்யுபஸ்பர்ஶநே ஸசைல முதகோபஸ்பர்ஶநாச்சுத்தி: ॥

பதிதன், சண்டாளன், பிரஸவித்தவள், தூரஸ்திரீ, பிரேதம் இவர்களைத் தொட்டவன் தொட்டவனைத் தொட்டவன் இவர்களை ஒருவன் தொட்டால் வஸ்திரத்துடன் ஜலத்தில் ஸ்நானஞ் செய்யச் சுத்தனுவானென்று கௌதமர் அபிப்பிராயப்படுகிருர்.

யாக்ஞவல்கிய ஸ்மிருதி பிராயச்சித்த அத்தியாயத்தில் முந்தி சண்டாளன் வைதிகமான ஓர் கர்மாவிற்கும் அர்ஹமில்லாதவன் என்று கூறிப் பிறகு

उदक्याशुचिभिः स्नायात् संस्पृष्टस्तैरुपस्पृशेत् ।
உதக்யாஶுசிபி: ஸ்நாயாத் ஸம்ஸ்ப்ருஷ்டஸ்தைருபஸ்ப்ருஶேத் ।

பஹிஷ்டாஸ்திரீ அசுசி இவர்களால் தொடப்பட்டால் ஸ்நானம் செய்யவும் என்கிற அந்த இடத்தில் அசுசி என்ற பதத்திற்கு விக்ஞானேசுவரர் அடியில்வருமாறு வியாக்கியானம் செய்கிருர்:— அசுசிஎன்பது பிரேதம், சண்டாளன், பதிதன், பிரஸவித்தவள் முதலானவர்களையும், சாவு தீட்டுள்ளவர்களையும் அறிவிக்கின்றது. அவ்விடத்திலேயே இன்னும் அநேக ஸ்மிருதி வசனங்களையும் நன்கு விளக்கிக் காட்டியிருக்கின்ருர்கள். அவர் வியாக்கியானமான மிதாக்ஷரையானது இன்னும் நம்முடைய வியவகாரங்களில் முக்கியப் பிரமாணமாயிருந்துவருவதும் தவிர, கோர்ட்டுகளிலும் அதையனுசரித்தே சில தீர்மானங்களைச் செய்து வருகிருர்கள். இவ்விதமிருக்க, இந்தத் தீண்டாமை விஷயத்தில் மாத்திரம் அம்மஹானுடைய வாக்குக்குப் பிரமாணம் கிடையாதென்று யாரால் சொல்லமுடியும் ?

देवलः— श्वपाकं पतितं व्यङ्गमुन्मत्तं शवहारकम् ।
इत्यारभ्य, सचेलस्य शिरः स्नात्वा तदानीमेव शुध्यति ।
ஶ்வபாகம் பதிதம் வ்யங்கமுந்மத்தம் ஶவஹாரகம் ।
இத்யாரப்ய ஸசேலஸ்ய ஶிரஸ்ஸ்நாத்வா ததாநீமேவ ஶுத்யதி ॥

சண்டாளன், பதிதன், அங்கஹீனன், பைத்தியங்கொண்டவன், பிரேதத்தைச் சுமப்பவன் முதலானவர்களைத்தொட்ட மனிதன், வேஷ்டியுடன் தலையை நனைத்து ஸ்நானம் செய்தால் உடனே சுத்தியாகிறான்' என்று தேவலர் அபிப்பிராயப்படுகிறார்.

வியாக்கிரபாதர்:—

சண்டாளன், பதிதன் இவர்களைக் கண்டால் தூரவிலக வேண்டும். பசுவின் வால் வீசும் தூரத்திற்குக் குறைந்தால் வஸ்திரத்துடன் ஸ்நானஞ் செய்யவேண்டும் என்று கூறுகிறார் விலக இடமில்லாமல் சங்கடமாக நேரும் சமயத்துக்கு இவ்விதம் கூறி பிறகு விலகுவதற்கு சௌகரியமாக இடமிருந்தால்

युगं युगद्वयं चैव त्रियुगं च चतुर्युगम् ।
चण्डाळसूतिकोदक्या पतितानामधः क्रमात् ॥
யுகம் யுகத்வயம் சைவ த்ரியுகம் ச சதுர்யுகம் ।
சண்டாளஸூதிகோதக்யா பதிதாநாமத꞉ க்ரமாத் ॥

'பதிதனுக்கு ஒரு நுகத்தடி தூரமும் பஹிஷ்டாஸ்திரீக்கு இரண்டு நுகத்தடி தூரமும், பிரஸவித்தவளுக்கு மூன்று நுகத்தடி தூரமும், சண்டாளனுக்கு நான்கு நுகத்தடி தூரமும் முறையே விலக வேண்டுமென்று கூறி, மேற்காட்டியவர்களை நன்கு அறிந்து தொட்டால் வஸ்திரத்துடன் ஸ்நானஞ் செய்து, அக்நியையும் ஸ்பரிசித்து நெய்யையும் உட்கொண்டால் பரிசுத்தனாகிறான்' என்றும் நன்கு விரித்துக் காட்டியிருக்கிறார்.

அங்கிரஸ் என்ற மஹாமுனியும் சண்டாளனுடைய நிழலை பிராமணன் மிதித்தால் ஸ்நானம்செய்து நெய்யையுட்கொண்டால் சுத்தியாகிறானென்று அறிவித்திருக்கிறார்.

(தொடரும்) உபபத்திராதிபர்.

# இந்துதர்மபரிபாலன ஸபை.

இம்மாதம் (31—8—28) வெள்ளிக்கிழமை மித்திரனில் வெளிவந்த வியாஸத்தை யாவரும் படித்திருப்பார்கள். இச்சபை சென்னையில் கோகலே மண்டபத்தில் ஆரம்பமாயிற்றும். இத் தலையங்கத்தைக் கண்ணுற்றதும் நம்தர்மத்திற்கு நேரிட்டிருக்கும் தீங்கை விலக்குவதற்காகவே இது ஆரம்பிக்கப்படுகிறதென்று எம் போன்றவர் எண்ண நேர்ந்தது. ஆனால் ஆவலுடன் விஷயத்தி லிறங்கிப் பார்த்ததும் அளவிலா மோசத்திற்காளானோம். அன்று அச்சபாத் தலைவரான ஸ்ரீமான் யக்ஞநாராயணய்யர் மிகவனுகூல மாகவே பேசினர் என்று பூரித்தோம். பிறகு ராமதாஸ் அக்கிரா ஸனம் வகித்தனாராம் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸய்யங்காரை மகாநாட்டைத் திறந்துவைக்குமாறு கேட்டுக்கொண்டதன்மேல் பலத்தகரகோஷத்தினிடையே வசனமாரிபொழிய ஆரம்பித்தனர். ஐயங்காரவர்கள் பேச்சைக் கேட்கவென்றே திரளான ஜனக்கூட் டம் ஏற்பட்டிருக்கவேண்டும். ஏற்கனவே ஐயங்காரவர்கள் உத் தியோகத்தில் மிகக் கியாதி பெற்று வழங்கினர். பிறகு காங்கிர ஸில் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்ததைப் பாலர் முதலறிவர். அதிலும் நம் இந்தியாவை முன்னுக்குக் கொண்டுவர திடமான யோசனை செய்ய இங்கிலாந்து முதலிய விடங்களுக்குப் போய்விட்டு இப்பொழுது தான் கப்பலை விட்டு இறங்கினர். ஆகவே இவர் கூற்றைக் கேட்க ஜனத்திரளேற் பட்டதென்பதைக் கூறவும் வேண்டுமா? சென்னையில் இத் தகைய சபை ஏற்படுத்தவேண்டுமென்று சின்னாட்களாய் உத் தேசித்துக்கொண்டிருந்த கனவான்கள் இச்சபைக்கு அய்யங் காரவர்கள் முகவுரை அளிப்பதே மேன்மையென்று நினைத்ததும் சரியே. இனி அய்யங்கார் மொழியை கவனிக்கவேண்டும்.

முதலில் அய்யங்காரவர்கள் சுருக்கமாக ஒரு வார்த்தை கூறி விட்டார் அதனுடைய விரிவு தான் மற்றவை. அதாவது சமூக சீர்திருத்தம் மனதிற்கிசைந்த வழியில் சகலருக்கும் சௌகர்ய மளிக்க முயற்சிப்பது முற்றிலும் விரும்பத்தக்கது என்கிறார். இதை கவனிப்பாம்.

சமூகசீர்திருத்தம் மனதிற்கிசைந்த வழியில் என்றால் யாருடைய மனதிற்கிசைந்தவழி. எல்லோருடைய மனம் என்பதொவ்வாது. ஒவ்வொருவருடைய மனம் தனித்தனி வேறுபட்டதாகவே இருக்கும். ஒரு கூட்டத்தார் தீர்மானம் செய்வது என்றாலும் அதுவும் சரியல்ல. ஒவ்வொரு கூட்டத்தாரின் தீர்மானம்சரியல்லவென்றே பற்பலகூட்டங்கள்கூடிக்கூக்குரலிடுகின்றன. இனி எச்சபையாருடையது உண்மையென்றேற்கமுடியும்.

இந்துமதக்கொள்கையானது ஜனங்களுடைய எக்காலமாறுதலுக்கும் ஏற்ற வழியில் இசைந்துவரக்கூடியதாய் இருக்கிறது. இதரமதங்கள் இவ்விதமில்லை என்கிறார். அய்யங்காரவர்கள் மதத்தின் வாஸனையேயற்றவர்போல் பேசுகிறார். ஒரு மதக்கொள்கையும் காலத்துக்குத் தக்கபடி மாறாது, அதிலும் இந்துமதக்கொள்கை மாறவே மாறாது. ஒரு சமயம்

कृते तु मानवा धर्माः त्रेतायां गौतमाः स्मृताः ।
द्वापरे शंखलिखिताः कलौ पाराशराः स्मृताः ॥

𑌕𑍃𑌤𑍇 𑌤𑍁 𑌮𑌾𑌨𑌵𑌾 𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌗𑍌𑌤𑌮𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃।
𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌶𑌂𑌖𑌲𑌿𑌖𑌿𑌤𑌾𑌃 𑌕𑌲𑍌 𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ।

கிருதயுகத்தில் மனுவினால் ஏற்படுத்தப்பட்ட தர்மமும் திரேதாயுகத்தில் கௌதம தர்மமும் த்வாபரயுகத்தில் சங்கலிகித தர்மங்களும் கலியில் பராசரதர்மங்களும் ஏற்பட்டனவென்று வசனப்படி மாறியிருக்கிறதென்று நினைப்பார்களோ யாதோ. அவ்விதம் நினைத்தால் அது தவறு. அங்கு ஒவ்வொரு தர்மத்திற்கும் எள்ளளவேனும் மாறுதல் காண முடியுமா? இதை உத்தேசித்தே இதேமாதிரி சுலோகத்தின் வ்யாக்கியானத்தில் மாதவாசார்யர்,

अत्रान्यशब्दो न धर्मस्य स्वरूपान्यत्वं व्याचष्टे किं तु प्रकारान्यत्वम् ।

𑌅𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌯𑌶𑌬𑍍𑌦𑍋 𑌨 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾
𑌚𑌷𑍍𑌟𑍇 𑌕𑌿𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍍 ।

இங்கும் தர்மம் வேறு என்று சொன்னதால் தர்மஸ்வரூபம் வேறு என்று அர்த்தமல்ல. மற்று அதை அனுஷ்டிப்பதில் மாறுதல் உண்டென்றார். ஆகவே தர்மம் ஒரு போதும் மாறாது. மற்றும் மாறும் ஸ்வபாவம் உண்டென்பதற்குப் பிரமாணமே இல்லை. முன்

சுலோகப்படி ஒவ்வொரு யுகத்துக்கு ஒவ்வொரு சாஸ்திரம் என்று சொன்னதாலதன்படி கலிக்குப் பராசரஸ்மிருதிதான் ஏற்பட்டது. பராசரஸ்மிருதிக்குமேல் இப்போது ஏற்படும் ஸ்மிருதிக்கு என்ன பெயரிடுகிறது. அப்படி ஏற்பட்டதாய் இக்கலியில் இதற்கு முன் சொல்லமுடியுமா? அல்லது வைத்தியநாததீக்ஷிதீயம்நிர்ணயஸிந்து முதலிய நிபந்தனக் கிரந்தங்களில் ஏதாவது தர்மவித்யாஸம் காண்பிக்க முடியுமா? ஆகவே வீண் முறண்டுவாதப் பிரமாணம் தவிற வேறு பிரமாணம் கிடையா?

ஹிந்துமதத்தில் பற்பல வித்தியாஸங்களும் ஒற்றுமையாக விருக்க இடமிருக்கிறதென்பது உண்மை தான். இந்து மதத்தில் உண்மையான பற்று நம்பிக்கை இருக்குமாகில் மனச்சோர்வு அதைரியமென்பதே நமக்கேற்படாது என்பதுபோதாது எல்லா மதத்திலும் அவ்விதமே நம்பிக்கையென்றே அவரவர் கூறுவர்.

இனி நம் மதம் கெட்டுப்போகாமற் பார்த்துக்கொள்ள வேண்டுமென்கிறார். மதம் கெடாது. நாம் மதத்தை விட்டு வழுவியோ மதத்தர்மம் தடுமாறி நடத்தியோ நாம் தான் கெடுகிறோம்.

இப்போது மதத்தைப் பாதுகார்க்க இச்சபையோர் ஏற்படுவதாயும் அதற்கு வைதிகர்கள் கேடு விளைவிக்க முற்படக்கூடாதென்று நான் மரியாதையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். என்று வைதிகர்களை பற்றிச் சில கூறிப் பிறகு வைதிகர்களைவிட வைதிக பக்தி எனக்கதிகமாய் இருப்பதாய் எண்ணிவருகிறேனென்று அய்யங்கார் கூறுகின்றனர்.

இங்கு கவனிக்கவேண்டும். நமது மதத்திற்குப் பெயர் வைதிகமதம் என்பதே. அவ்விதம் வைதிகமதம் அனுஷ்டிப்பவர்கள் வைதிகரெனப்படுவர். கிருஸ்துமதம் அனுஷ்டிப்பவர் கிருஸ்துவர். மகம்மதியமதம் அனுஷ்டிப்பவர் மகம்மதியர் என்பது இதற்கு உவமை. இவ்விதமிருக்க, வைதிகர்களைப் பார்த்து இதற்குக் கேடு விளைவிக்கக்கூடாதென்று வைதிக அய்யங்கார் கேட்க யாது நியாயம். மேனாட்டுக் கல்வியினாலும் துர்ப்போதனையினாலும் வைதிகர் என்றால் பல அபவாதத்திற்கிடமாய் இருக்கிறதென்கிறார். அதன்படி அய்யங்காரவர்களின் மனமும் கெட்டிருக்கலாமென்று விளங்குகிறது. இது பின்னால் வெளியாகும்,

பிறகு இந்துமதம் ஒரு காலம் அனுஷ்டிக்கப்பட்டு வந்த பழைய ஸம்பிரதாயத்தைப் பின்பற்றும் மதமென்றும் அது விருத்தியடைய வழியற்றதென்றும் கூறுவது அசட்டுத்தனமாகும் என்கிறார்.

இங்குதான் ஆழ்ந்து கவனிக்கவேண்டும். அய்யங்காரவர்கள் மேல்நாட்டுப் படிப்பினாலும் தன் புத்தித் திறமையாலும் நிச்சயமாய்க் கடைந்தெடுத்தது இந்த ஸாரம்தான். இந்த வெண்ணெயைத் திரட்டி எல்லோருக்கும் புதிதாய்க் காண்பிப்பதாய்ப் பேசுகிறார்கள். ஆனால் இது புதிதல்ல. இவருக்கு முன்பே ஆர்ய ஸமாஜிகளும் சீர்திருத்தக்காரர்களும் ஏராளமாய் எடுத்து விற்று வாங்குவாரின்றி ஈயோட்டிக்கொண்டு ஊர்ஊராய்க்கட்டி அனுப்புகின்றனர். அங்கங்கும் அதிகவிலைபோகவில்லை. இதைப்புதிதென்று அய்யங்காரவர்கள் நினைக்கவேண்டாம்.

உண்மை இது. இந்துமதம் என்பது ஸனாதன மதம். அது ஒருகாலம் பிறந்து பால்யாவஸ்தை முதலிய திரிபுகளை அடையவில்லை. பழைய ஸம்பிரதாயமென்றும், புது ஸம்பிரதாயமென்றும் ஒன்றும் மதத்திற்குக் கிடையா. எப்போதும் ஒரே அனுஷ்டானம் தான். ஆனால் கிருதயுகத்திற்போல் மற்றயுகங்களில் சற்று பேதமடையும். அதுவும் நமது சாமர்த்தியத்தாற் செய்துகொள்வதல்ல. முக்காலங்களையுமறிந்த முனிவர்களே இந்தயிந்த யுகத்திற்கு இதிது அனுஷ்டானமென்று சௌகர்யப்படுத்தி விட்டனர். ஆகவே அதில் நாம் சிரமப்படவேண்டியதே இல்லை. மத க்ரந்தங்கள் சொல்கிற சட்டப்படிதான் அனுஷ்டிக்க வேண்டும். அப்படி அனுஷ்டிக்காமல் விட்டால் சட்டத்திற்குக் கேடொன்றுமில்லை. அனுஷ்டானத்தை விட்டவனுக்குத் தான்ராஜதண்டனைபோல் தெய்வ தண்டனை ஏற்படும். இது அய்யங்கார் அவர்களுக்குத் தெரிந்தும் ஏதோ தான் சட்டசபையில் பல மாறுதல் பௌருஷத்தால் செய்வதுபோல் இங்கு செய்துவிடலாம் என்று எண்ணி விட்டனர். லௌகிகச் சட்டமாற்றத்திற்கும் பிரத்யக்ஷமான சில அசௌகர்யங்களைக்கொண்டு சிரமப்பட்டு மாற்றுகிறார்கள். அப்பிரத்யக்ஷமான தர்மங்களை மாற்ற பரலோகத்தில் ஏதாவது தடை ஏற்படுவதாகவே சாஸ்திரப்ரமாண மூலம் தெரிந்தால்லவோ மாற்றலாம் அதின்றி மாற்றுவதெப்படி. உண்மையான இந்துவானவர்தம் மதத்திலுள்ளோரைப் பிறமதத்திற்கு ஓடுமாறு வெருட்டமாட்டார் என்கிறார்.

இங்கு அய்யங்காரவர்களைத்தான்கேட்கிறேன். எந்த இந்து அவ்விதம் ஓட்டுகிறுன். தாங்கள் உண்மையான இந்துவல்லவா. இவ்விதம் எவ்வளவோ பெயர் ஓடியதற்குத் தாங்களும் ஏதுவாயிருக்கலாமே. தாங்கள் முன்னின்று அவர்களை ஓடாமல் தடுக்க வேண்டிய சக்தி பலவிதத்திலிருந்தும் உபேக்ஷை செய்திருக்கிறீர்கள்.

பிறகு ஸ்மிருதிசாஸ்திரங்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு மனித யோஜனைகளையும், தத்துவ அபிவிருத்திகளையும் தடைப்படுத்துவது அசட்டுத்தனம் என்கிறுர்கள்.

இக்குற்றத்திற்கு வைதிகர்கள் ஆளாகமாட்டார்கள். யோசனைகளாலும், தத்துவாபிவிருத்திகளாலும் எத்துணையோ மகான்கள் பெயரும் புகழும் பெற்று இகபரஸாதகமடைந்தனர் அடைகின்றனர். மற்று ஸ்மிருதி சாஸ்திரம் என்று பெயரைச் சொல்லிக்கொண்டு அவைகளுக்கு அன்னியாயமான அர்த்தங்களைவரம்பின்றிக் கூறிக்கொண்டு, பெரியோர்களை இகழ்ந்துகொண்டு தாம் போகும் வழிதான் சரியென்று தம் புத்தி ஒன்றையே பிரமாணமாகக்கொண்டுதத்துவாபிவிருத்தியைத்தடைப்படுத்துவதுலௌகிகர்கள் தான்.

ஸ்மிருதிகளும் சாஸ்திரங்களும் வேதங்களை அனுசரித்துக் காலத்திற்கேற்ற விதிகளைக் கூறுபவையாகும். அவை நிலைமைக் கேற்றவாறு மாறிக்கொண்டே வரும் என்கிறுர். இது முற்றிலும் சரியே. ஆதல்பற்றியே कृते तु मानवा धर्मा [illegible] என்ற சுலோகம் முதலியன வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர வேறு மாறுதல் அடையமுடியாதென்பதை அய்யங்கார் அவர்கள் வாக்கே உறுதி கொடுக்கிறது. எவ்விதமெனின் வேதங்களை அனுஸரித்து என்றே சொன்னுர்.

பிறகு ஹிந்துக்கள் பரிஷத்துகளில் கூடிவிதிக்கும் நடத்தைமுறையே ஸ்மிருதிகளாகும் என்கிறுர். இவ்விஷயத்தில் ஸாரம் இது. அய்யங்காரவர்கள் சட்ட சபையில் உட்கார்ந்துகொண்டு ஜனங்கள் விரும்பாவிடினும் தங்களுக்குப்பிடித்த ஒரு விஷயத்தைச் சட்டமாக்கி விடுவது போல் பரிஷத்துக்காரர்கள் சொல்வதையெல்லாம் சட்டமாக்கி விடுவார்களென்று இக்காலத்தைப்பார்த்து அனுமானிக்கிறுர்கள். இது சரியன்று. அவ்விதம் ஒரு ஸ்மிருதியும் ஏற்படவில்லை. ஸ்மிருதி இயற்றிய தனித்தனி ரிஷி

களின் பெயர்தான் புத்தகத்தில் விளங்கும். மனுஸ்மிருதி, பாராசரஸ்மிருதி, அத்ரிஸ்மிருதி, ஹாரீதஸ்மிருதி, என்பதாதி அவரவர்களாற் தான் வேததர்மத்திற்கு வழுவாமல் இயற்றப்பட்டன. பரிஷத் ஸ்மிருதி என்று கிடையாது. (தொடரும்)

M. N. சுப்பிரமணியசாஸ்திரீயள்.

### கண்டரமாணிக்கம்

## ஹரி ஹர குஹ பஜனை மடம்.

இவ்வூரில் மஹாஜெனங்களால் 4-வருஷத்துக்கு முன் பஜனையும்ஏற்படுத்தி ரொம்ப பக்திசிரத்தையுடனும் உத்ஸாகத்துடனும் நடந்து வந்தது. அப்பால் ஸ்ரீமான். பசுமடம். மெ. பெரிமெய்யப்பசெட்டியார் அவர்களும் ஷை தர்மத்தைத்தாம் செய்வதாக ஒப்புக்கொண்டு பகாவானுடைய அனுக்ரஹத்தால் ஷைசெட்டியாரவர்களால் இதற்கென எதிர்பாராமல் ஏருளமான பொருள் சிலவில் கட்டி முடிந்த கட்டிடத்தில் ஸ்தாபித்து பிரதி ஏகாதசி சனிக்கிழமைகளிலும் வருஷம் தோறும் தனுர்மாஸத்தில் திருப்பள்ளியெழுச்சி பஜனையும் ஸ்ரீமான் செட்டியாரவர்கள் பொருளுதவியில் மகாஜனங்களால் மிகவும் சிரத்தையுடன் நடந்துவருகிறது. ஆனால் இவ்வளவு விமரிசையாக நடந்து வருகிற இடத்தில் கோகுலாஷ்டமி, ஸ்ரீராமநவமி, இப்பேர்பட்ட விசேஷகாலங்களில் 10-நாள் உத்ஸவமும் திருப்பள்ளியெழுச்சி பஜனையில் ராதா கல்யாணமும் நடத்த வேண்டியதும், ரொம்ப முக்கியமாயுள்ளது இதையெல்லா ஊர் பஜனையிலும் சொல்பமாயுள்ள இடத்தில் கூட கட்டாயம் நடத்துகிறார்கள். இது விஷயங்களில் ஸ்ரீமான் செட்டியாரவர்கள் ரொம்ப பக்தியுடனும், உத்ஸாகத்துடனும் வேண்டிய பொருளுதவி செய்ய சித்தமாயிருக்கிறார்கள். அதுபோல் பாகவதாளும் இது விஷயத்தில் சிரத்தையுடன் வேண்டிய முயற்சி செய்து ஷை உத்ஸவங்களில் சிரமத்தைப் பாராமல் நடத்தி வருவார்களென்று ஸ்ரீ கண்ணபிரானை பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு பஜனைக்கும் பாகவதாளெல்லோரும் மஹாஜனங்களும் தவறாது வந்திருந்து ரொம்ப பக்தியுடன் பஜனையும் நடந்து வருகிறது. இதைப்போல் நீடூழிகாலம் நடந்து வரும்படிக்கும்

பக்தர்களும் சகல சத்குண ஸம்பன்னர்களாய் பூர்ண ஆயுசுட னும் இருந்து வரும்படிக்கும் பகவான் கிருபை செய்வாருக.

ஸ்ரீமான் செட்டியாரவர்களுக்கும் பகவானுடைய அனுக்கிர ஹத்தினுல் தான் இப்பேர்பட்ட தர்மம்கிடைத்திருக்கிறது. அவர் களும் பூர்ண ஆயுசுடனும் நீங்காத செல்வத்துடனும் இருந்து தர்மகைங்கர்யங்களைச்செய்து வருவார்களென்றுபகவானைப்பிரார் த்தித்துக்கொண்டிருக்கிறேம். ஆர்யதர்மஸம்வர்த்தனிசபையார்

கண்டரமாணிக்கம்

ராமனுதபுரம் ஜில்லா.

---

## திருக்கோவிலூர்தாலூக்கா மணலூர் பேட்டை
## ஆர்யமதாபிவர்த்தனி ஸபா, 3,

ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் அனுக்ரஹத்தை முன்னிட்டு நாளது விபவ ஹூ ஆடிமீ 30உ 14-8.28 மங்களவாரம் மாலை 3-மணிக்கு பிரம்மஸ்ரீ பாலேசுவரசாஸ்திரிகள் தலைமையில் ஸபை கூடிற்று. பிராம்மணோத்தமர்கள் அனைவர்களும் வந்திருந்தார்கள். பிரமஸ்ரீ திருவரங்கம் ருஜகோபாலதாதாசாரியார் அவர்கள் ஸந்தியாவந்த னம் என்கிற விஷயத்தை எடுத்துக்கொண்டு அர்க்கியம் கொடுப் பது, சூர்யபகவானுடைய இடரைத் தீர்ப்பதற்கென்றும் அதினுல் சூர்யபகவானுக்குத்திருப்தியாகி ஒஷதிவர்க்கங்களைவிருத்திசெய்து நமக்கு நன்மையை விளைவிக்கிறரென்றும் அது காரணத்தைமுன் னிட்டு பிராம்மணர்கள் அனைவரும் நித்யமாக உஷ:காலத்திலெழு ந்திருந்து பிராதஸ்னனம் செய்து திருஸந்திகளிலும் ஸந்தியாவந்த னுதி நித்யகர்மானுஷ்டானங்களைத் தவருது செய்து வர வேண்டு மென்றும் காயத்ரியின் மஹிமை இப்படிப்பட்டதென்றும் காய த்ரியால் சதுர்வித புருஷார்த்தத்தையும் அடையலாமென்றும் இவ்வித பிரபாவமுள்ள காயத்ரியை அக்ரஜன்மாக்களாகிய நாம் திருஸந்திகளிலும் கைவிடாமல் கிரமப்படி ஜபித்து வர வேண்டும், என்றும் சுருதிஸ்மிருதி பூர்வமாக எடுத்துரைத்தார். மணி 6½ஆய் விட்டதாலும் ஸந்தியாகாலம் தவறி விடுகிறதென்கிற நோக்கத் தாலும் ஷை விஷயத்தைத் தெரிந்தவரையில் பூர்த்தியாகச் சொல் வதற்கில்லை. அடுத்த ஸபையில் பூர்த்திசெய்துக் கொள்வோமெ ன்று நிருத்தினர். அக்ராஸனர் வந்தனோபசாரத்துடன் ஸபை கலைந்தது. சுபம்!

M. கிருஷ்ணசாமி அய்யர்,
ஸ்ரீமடம் முத்திரை கர்த்தா

# ஸந்தியாவந்தனம்.

(370-வது பக்கத்தொடர்ச்சி)

## ஸந்தியாவந்தனத்தை ஏன் அனுஷ்டிக்கவேண்டும் ?

அனேக சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருப்பதாலும் சுருதிஸ்மிருதிகள் பகவானின் ஆக்ஞாரூபமானவையாதலாலும் அவசியம் செய்யவேண்டும். அச்சுருதிஸ்மிருதிகள் யாவை எனின் அவைகளை இங்கு உதாஹரிப்போம்.

1. प्रातरुत्थाय सन्ध्यामुपासीत। यत्सन्ध्यामुपासते ब्रह्मैव तदुपासते ।

𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑍁𑌤𑍍𑌥𑌾𑌯 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍀𑌤 । 𑌯𑌤𑍍𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।

காலையில் எழுந்து ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டும். ஸந்தியாவந்தனத்தைச் செய்வதானது நன்றாகத் தியானம் செய்யப்படுவதற்கு யோக்யனான பகவானையுபாஸித்தலேயாகும்.

2. अहरहः सन्ध्यामुपासीत । 𑌅𑌹𑌰𑌹𑌃 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍀𑌤 ।

பிரதிதினமும் ஸந்தியாவந்தனத்தையுபாஸிக்கவேண்டும்.

3. उद्यन्तमस्तं यन्तमादित्यमभिध्यायन्कुर्वन्ब्राह्मणो विद्वान्सकलं भद्रमश्नुते

𑌉𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌸𑍍𑌤𑌂 𑌯𑌨𑍍𑌤𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑌕𑌲𑌂 𑌭𑌦𑍍𑌰𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ।

சூரியன் உதிக்கும் ஸமயத்திலும் அஸ்தமிக்கும்ஸமயத்திலும் சூரியாந்தர்கதபகவானைத் தியானிக்கும் பிராமணன் ஞானத்தைப் பெற்று எல்லாவித மங்களங்களையும் அடைகிறான். (தைத்திரீய பிராம்மணம்)

4. तस्माद्ब्राह्मणोऽहोरात्रसंयोगे सन्ध्यामुपास्ते स ज्योतिषोज्योतिषोदर्शनात्

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌸𑌂𑌯𑍋𑌗𑍇 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌸 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍋 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ।

5. मौञ्जीबन्धनमारभ्य सायंप्रातश्च कालयोः ।
माध्याह्नेऽपि च कर्तव्यं यावत्प्राणविमोक्षणम् ।

𑌮𑍌𑌞𑍍𑌜𑍀𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌸𑌾𑌯𑌂𑌪𑍍𑌰𑌾𑌤𑌶𑍍𑌚 𑌕𑌾𑌲𑌯𑍋𑌃 ।
𑌮𑌾𑌧𑍍𑌯𑌾𑌹𑍍𑌨𑍇𑌽𑌪𑌿 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।

உபநயனம் ஆனதுமுதல் (பிராணவியோகம்) இறக்கும்வரையிலும் பிரதிதினம் காலையிலும், மத்தியானத்திலும், மாலையிலும் ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டும்

6. स्नानमब्दैवतैर्मन्त्रैः मार्जनं प्राणसंयमः ।
सूर्यस्य चाप्युपस्थानं गायत्र्याः प्रत्यहं जपः ॥

ஸ்நாநமப்தைவதைர்மந்த்ரை: மார்ஜநம் ப்ராணஸம்யம: ।
ஸூர்யஸ்ய சாப்யுபஸ்தாநம் காயத்ர்யா: ப்ரத்யஹம் ஜப: ॥

ஒவ்வொருநாளும் ஜலாபிமானி தேவதாவாசகமான மந்திரங்களால் மார்ஜனத்தையும், பிராணாயாமத்தையும், சூரியனைக் குறித்து உபஸ்தானத்தையும், காயத்ரீஜபத்தையும் செய்யவேண்டும். (யாக்ஞவல்க்யஸ்மிருதி, ஆசாரகாண்டம்) இன்னும் பலசுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் இவ்விதமேவிதிக்கப்பட்டிருக்கிறது.

சங்கை:— சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருக்கும் சில கர்மாக்களை நாம் செய்யாமலிருப்பதுபோல் ஸந்தியாவந்தனத்தையும் ஏன் செய்யாமல் இருக்கக்கூடாது ?

ஸமாதானம்:— சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருக்கும் கர்மங்கள் நித்யம், நைமித்திகம், காம்யம் என்று மூன்று விதங்களாகும். எப்பொழுதும் செய்தே தீரவேண்டும் என்று விதிக்கப்பட்ட அக்னிஹோத்திரம் முதலிய கர்மங்கள் நித்யமானவை. சந்திரக்ரஹணம், சூரியக்ரஹணம் முதலிய புண்ய காலங்களின் நிமித்தம் செய்யப்படும் தானம், ஸ்நானம் முதலிய கர்மங்கள் நைமித்திகமானவை. மழை, ஸம்பத்து முதலிய ஐஹிகப் பலன்களையுத்தேசித்துச் செய்யப்படும் காரீரியாகம், புத்ரகாமேஷ்டி முதலிய கர்மங்கள் காம்யமானவை. இவைகளினிடையே நித்யகர்மம் என்பதைமாத்திரம் செய்யாமல் விட்டுவிடமுடியாது. ஏனென்றால் அதைச் செய்யாவிடில் பல அனர்த்தங்கள் ஸம்பவிக்கும். பிரகிருதமான ஸந்தியாவந்தனம் என்னும் கர்மமானது நித்யகர்மமானதால் மற்ற கர்மங்களை இழந்துவிட்டாலும் இதைச் செய்தே தீரவேண்டும்.

ஸந்தியாவந்தனம் செய்யாவிட்டால் என்ன அனர்த்தம் நேரிடும்?

1. नातिष्ठति तु यः पूर्वां नोपास्ते यश्च पश्चिमाम् ।
स शूद्रवद्बहिष्कार्यः सर्वस्माद्द्विजकर्मणः ॥

நாதிஷ்டதி து ய: பூர்வாம் நோபாஸ்தே யஸ்து பஶ்சிமாம்।
ஸ ஶூத்ரவத் பஹிஷ்கார்ய: ஸர்வஸ்மாத் த்விஜகர்மண:॥

எவன் காலையிலும் மாலையிலும் ஸந்தியாவந்தனம் செய்கிறதில்லையோ, அவன் பிராமணனுக்கு விதிக்கப்பட்டிருக்கும் எல்லா நற்காரியங்களைச்செய்ய சூத்திரன்போல் அனதிகாரியாகிறான். (ஸர்வகர்மபஹிஷ்கிருதன்) மநுஸ்மிருதி.

2. सन्ध्याहीनोऽशुचिर्नित्यं अनर्हः सर्वकर्मसु ।
यदन्यत्कुरुते कर्म न तस्य फलभाग्भवेत् ॥

ஸந்த்யாஹீனோऽஶுசிர்நித்யம் அனர்ஹ: ஸர்வகர்மஸு।
யதன்யத்குருதே கர்ம ந தஸ்ய பலபாக்பவேத்॥

ஸந்தியாவந்தனத்தைச் செய்யாதவன் அசுத்தனாகிறபடியால் எல்லாக் கர்மங்களைச்செய்ய அயோக்யனாகிறான். அவன் செய்யும் எந்த தர்மகார்யமும் பலனைத்தாராது. (தக்ஷஸ்மிருதி)

3. योऽन्यत्र कुरुते यत्नं धर्मकार्ये द्विजोत्तमः ।
विहाय सन्ध्याप्रणतिं स याति नरकायुतम् ॥

யோऽன்யத்ர குருதே யத்னம் தர்மகார்யே த்விஜோத்தம:।
விஹாய ஸந்த்யாப்ரணதிம் ஸ யாதி நரகாயுதம்॥

ஒருவன் பிராம்மணசிரேஷ்டனாயினும் ஸந்தியாவந்தனத்தைமாத்திரம் செய்யாமல் வேறு எந்த தர்மகார்யத்தைச்செய்தபோதிலும் ஆயிரக்கணக்கான நரகங்களை அடைகிறான். கூர்மபுராணவசனம்.

4. अन्यकर्मफलं नास्ति सन्ध्याहीनेऽशुचित्वतः ।
जीवमानो भवेच्छूद्रः मृतः श्वा जायते ध्रुवम् ॥

அன்யகர்மபலம் நாஸ்தி ஸந்த்யாஹீனோऽஶுசித்வத:।
ஜீவமானோ பவேச்சூத்ர: ம்ருத: ஶ்வா ஜாயதே த்ருவம்॥

ஸந்தியாவந்தனத்தைச் செய்யாதவன் பரிசுத்தமில்லாதவனாகையால் அவன் செய்யும் மற்ற தர்மகாரியத்திற்குப் பலனில்லை. அப்பேர்ப்பட்டவன் ஜீவித்திருக்கும்வரையில் சூத்திரன்போல் வேதோக்தஸர்வகர்மபஹிஷ்கிருதனாகுவதல்லாமல் இறந்தவுடன் மறுஜன்மத்தில் நாயாகப்பிறப்பான், நிச்சயம். (தர்மஸிந்து)

5. यः सन्ध्यां कालतः प्राप्तां अकस्मादतिवर्तते ।
सूर्यहत्यामवाप्नोति उलूकत्वमियात्सदा ॥

𑌯𑌃 𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌂 𑌕𑌾𑌲𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌂 𑌆𑌲𑌸𑍍𑌯𑌾𑌦𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌸 𑌸𑍂𑌰𑍍𑌯𑌹𑌤𑍍𑌯𑌾𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌉𑌲𑍂𑌕𑌤𑍍𑌵𑌂𑌚 𑌯𑌾𑌤𑌿 𑌸𑌃 ॥

எவனொருவன் ஸந்தியாவந்தனத்தைக்குறித்தகாலத்தில் யாதிருச்சிகமாயினும் செய்யாமல் இருந்துவிடுகிருனே, அவன் ஸூரியனைக்கொன்ற பாபத்தை அடைகிருன். மேலும் கோட்டானின் பிறப்பை அடைவான். (அக்னிபுராணம்)

சங்கை:—

ஸந்தியாவந்தனம் செய்யாவிடில் சூரியனைக்கொன்ற பாபம் வரும் என்பது எப்படிப் பொருந்தும்? சூரியனே ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிருன். நம்முடைய கைக்கு எட்டினுலல்லவோ கொல்லலாம். கொன்ருலல்லவோ பாபம் அப்படித்தான் கைக்கு எட்டினதாக வைத்துக்கொள்வோம் அவனை நம்மால் கொல்ல முடியுமா?

ஸமாதானம்:—

ஒருவனை கொல்வதென்ருல் கத்தியினுல் அவன் தலையை வெட்டுதல் என்று மாத்திரம் அர்த்தமல்ல. ஒருவன் ஆயிரக்கணக்கான சத்துருக்களின் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கையில் நாம் அவனை அவர்களிடமிருந்து காப்பாற்ருமல் இருப்பதால் அவனுக்கு மாணம் ஏற்பட்டால் அவனை நாம் கொன்றதுபோலவே ஆகும். இதை ஒரு திருஷ்டாந்தத்தால் விளக்குவோம். ஒரு அரசனுக்கு துஷ்டர்களை நிக்ரஹம் செய்து தன் குடிகளைக் காப்பாற்றுவது சிறந்த கடமையாகும். அக்குடிகளை ஹிம்ஸிக்கும் துஷ்டர்களைத் தண்டியாமல் அத்துஷ்டர்களால் அக்குடிகளுக்கு உபத்திரவம் ஏற்பட்டால் அது ராஜாவால் தான் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறதல்லவா! அம்மாதிரியே இங்கு சூரியனைக்கொல்வதென்ருல் அவனைக் கத்தியால் வெட்டுவது என்று அர்த்தமல்ல. அப்படியாயின் மேற்சொன்ன சங்கை பொருந்தும். ஆனுல் மந்தேஹாள் என்ற கோரமான ராக்ஷஸர்களால் ஸந்தியாகாலங்களில் பீடிக்கப்படும் சூரியனை நம்முடைய சந்தியாவந்தனத்தின் ஓர் பாகமாகிய அர்க்கியத்தால் அவ்வரக்கர்களைத்தாக்கி மீட்காமல் இருப்போமாகில் நாம் சூரியனைக் கொன்றவர்கள் தாம் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. இவ்விஷயத்தை அர்க்யப்ரதானம் என்பதைப்பற்றி எழுதும் போது விஸ்தாரமாக ஆராய்வோம்.

M. ராமராவ்.